# கீற்று



தமிழால் இணைவோம், தமிழ்போல் வளர்வோம்!

# ஆசிரியர் உரை

அன்புக்குரிய மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும், மற்றும் வாசகப் பெருமக்களுக்கும் என் கனிவான வணக்கங்கள்.

தமிழ்க்கல்வியை கற்பிக்கும் தலையாய நோக்கத்துடன் 2015 ஆம் ஆண்டு, 62 மாணவர்கள் மற்றும் 8 ஆசிரியர்களுடன் ஆரம்பிக்கப்பட்டதுதான் தென் விரிகுடா தமிழ்க் கல்வி. இது நாள் வரை 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் நம் தமிழ்க்கல்வி மூலம் பயனடைந்துள்ளனர். ஆறு வருடங்களைக் கடந்து, எண்ணற்ற தன்னார்வலர்களின் கடின உழைப்பாலும், கூட்டுமுயற்சியாலும், தென் விரிகுடா தமிழ்ச் சங்கத்தின் ஒரு அங்கமாக சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது.

"கற்றது கையளவு, கல்லாதது உலகளவு"
எனும் ஔவையின் கூற்றுக்கிணங்க தென் விரிகுடா தமிழ்க் கல்வியின் புதிய முயற்சி தான் 'கீற்று' எனும் இந்த மின்னணு இதழ். வாசிப்பு ஒரு மனிதனை பக்குவப்படுத்தி மென்மேலும் உயரச் செய்யும். அறிவுக்கானத் தேடலை வெறும் வகுப்புக் கையேட்டுடன் நிறுத்தி விடாமல், பல்வேறு நூல்களையும், இதழ்களையும் வாசிப்பதன் மூலம் நாம் பெற்றுக் கொள்ளலாம். இதழ்களை வாசிப்பதன் மூலம் மனிதன் புதியப் பாதைகளையும், புதிய கனவுகளையும் மேற்கொள்ள முடியும்.

ஒவ்வொரு நீண்ட பயணமும் நாம் எடுத்து வைக்கும் முதல் அடியில் தொடங்குகிறது. நமக்குத் தெரிந்ததைப் பகிரவும், தெரியாததை அறியவும் 'கீற்று' ஒரு களமாக அமையும் என்ற நம்பிக்கையுடன் இந்தப் பயணத்தின் துவக்கமாக எடுத்து வைத்ததே இந்த முதல் அடி. இந்த முதல் இதழில்

உங்கள் பார்வைக்குப் படைக்கப்பட்டவை: இலக்கியச் சிந்தனை, கவிதை, சிறுகதை, தகவல் களஞ்சியம், பழமொழி விளக்கம், ஓவியம், தமிழை அறிவோம், கடி ஜோக், இன்னும் பல...

'கீற்று' வின் இந்த நீண்ட தூரப் பயணம் மென்மேலும் மேம்பட வாசகர்களாகிய உங்களின் படைப்புக்களையும், ஊக்கத்தையும், கருத்துக்களையும் keetru@sbtsla.org எனும் மின்னஞ்சலுக்குப் பகிரவும். இதழுக்கான படைப்புக்களைத் தந்துதவும் அனைத்து ஆக்கத்தாரருக்கும், ஊக்குவித்து உற்சாகப்படுத்தும் அன்பான வாசகர்களுக்கும் 'கீற்று' என்றென்றும் நன்றிக்கடன் பட்டுள்ளது.

தொடர்ந்து பயணிப்போம்!

**சுபா ஹரி**



# தலைவர் உரை

அன்பார்ந்த நண்பர்களே - தமிழ் உறவுகளே வணக்கம்!

தாய்மொழியானது ஒரு மனிதன் சிந்தித்து, தனது கருத்துகளைத் தங்கு தடையின்றி இயல்பாக வெளிப்படுத்த உதவும் மொழியாகும். மொழிக்கான இலக்கண நூல் என்பது, 3000 ஆண்டுகளுக்கு முன்பே உருவான தொல்காப்பியம் எனும் நூல் தான். ஒரு இலக்கண நூலே இவ்வளவு பழமையானது என்றால், பயன்பாட்டில் தமிழ் மொழி இதற்கும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்திருக்க வேண்டும் என்பதே உண்மை. இலக்கணம், அறிவியல், தொழிற்புரட்சி, வாழ்நிலை, வானியல், நீர் மேலாண்மை என்று எந்த துறையாக இருந்தாலும் அங்கே நம் தமிழும், தமிழர்களும் உச்சாணிக்கொம்பில் நிற்கின்றனர் என்பதைப் பல்வேறு நூல்களிலிருந்து நாம் அறிகிறோம்.

'மண்திணித்த நிலனும்
நிலன்ஏந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும் என்றாங்கு
ஐம்பூதத்து இயற்கை போல'
-என்கிறது புறநானூறு

கீழடியில் கிடைத்துள்ள வரலாற்றுச் சான்றுகள் நமது பழந்தமிழரின் தொழில் புரட்சியின் கண்கூடான சாட்சிகளாக விளங்குகின்றன. 2600 ஆண்டுகளுக்கு முன்பு உள்ள நகர அமைப்பிலே கூட ஓய்வு அறை இருப்பதும், நூல் நூற்கும் தக்ளி மூலம் அக்கால மக்கள் நூல் நூற்று

ஆடை நெய்து அணிந்து வாழ்ந்திருப்பதை உணர்த்துவதும், சுடுமண் உறைகேணிகளும், சுட்ட செங்கற்களால் கட்டப்பட்ட வீடுகளின் சான்றுகளும் அதிசயத்திலும் அதிசயமாக உள்ளது.

இத்தகைய தொன்மையும், பழமையும், பெருமையும் உடைய நம் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக நம் தாய் மண்ணில் பல்வேறு திட்டங்களும் செயல்களும் தொடர்ந்து நடைப்பெற்றுக் கொண்டே இருக்கின்றன. இந்த செயல்களுக்கு துணை நிற்கும் வகையில், பொருள் ஈட்டும் பொருட்டு அமெரிக்கா மற்றும் பல்வேறு நாடுகளுக்கு இடம் பெயர்ந்து இருந்தாலும், நம் தாய் மொழியாம் தமிழைப் பாதுகாத்து வளர்க்க, நாம் அனைவரும் ஒன்று கூடி தமிழ்ச் சங்கங்களையும், தமிழ்ப் பள்ளிகளையும் அமைத்து நடத்தி வருகிறோம்.

வானுயர்ந்த கட்டிடங்கள், பரந்துவிரிந்த பசிபிக் கடலின் எழில் பொங்கும் நிலப்பரப்பு, உலகம் புகழும் தொழில்நுட்ப வல்லுநர்கள், அசர வைக்கும் அறிவியலாளர்கள் என இறுமாந்திருக்கும் லாஸ் ஏஞ்சல்ஸ் பெருநகரில், தென் விரிகுடா பகுதியில் ஒரு சிறு குழுவால் ஆரம்பிக்கப்பட்ட நமது தென் விரிகுடா தமிழ்ச் சங்கமும் அதன் ஒரு முக்கிய பகுதியான தென் விரிகுடா தமிழ்க் கல்வியும், பல தன்னார்வலர்களின் தன்னலமற்ற உழைப்பாலும், தமிழ் உணர்வு என்கிற செறிவூட்டலாலும், இன்று ஒரு ஆலமரமாக வளர்ந்து தொடர்ந்து நடைப்பெற்றுக் கொண்டிருக்கிறது.

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் துறை, அயலகத்தில் வாழும் புலம் பெயர்ந்த தமிழர்களிடம் நடத்திய ஒரு ஆய்வில் 42 சதவீத இரண்டாம் தலைமுறை தமிழர்களுக்கு மட்டும் தான் தமிழ் மொழி தெரிந்திருக்கின்றது. இது

மூன்றாம் தலைமுறையை அடையும்போது மேலும் குறைந்துவிடும் என்று கண்டறிந்துள்ளனர். இந்த நிலையை நம்மால் முடிந்த அளவு சரி செய்யும் விதமாக, தமிழர்களின் முதல் அடையாளமான தமிழ் மொழி, அயலகத்தில் அடுத்தடுத்த தலைமுறையைச் சென்றடையும் ஒரு பாலமாக இயங்கி வருகிறது, நமது தென் விரிகுடா தமிழ்க் கல்வி. அந்தப் பாலத்தின் தூண்களாகத் தமிழ் மொழிக்குச் சேவை செய்யும் சேவகர்களாக தன்னலமற்று பணி புரியும் தமிழ் கல்வியின் முதல்வர், துணை முதல்வர், அனைத்து ஆசிரியர்கள் மற்றும் உதவி செய்யும் அத்துணை நல்லுள்ளங்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி.

இன்றமைந்தது இன்றே தீர்ந்ததென நில்லாது, தமிழின் பெருமையும் வளமையும் மனித இனம் உள்ளவரை நிலைக்க வேண்டும் என்பதால் நாம் செய்கின்ற பணிகள் யாவும் அடுத்த தலைமுறைக்கும் சென்றடைய வேண்டும் என்பதில் தென் விரிகுடா தமிழ்ச் சங்கம் உறுதியுடன் இருக்கிறது.

எம்மொழிக்கும் மூத்தவளே, செம்மொழியாய் நிலைத்தவளே, உன் புகழ் உலகமெங்கும் பரவிட, அயராது உழைப்போம் என்று சூளுரைப்போம்!

**அன்புடன்,**
**ரெங்கராஜன் முத்துசாமி,**
**தென் விரிகுடா தமிழ்ச் சங்கம்.**





# கீற்று

காற்றோடு மூக்கு உரசி
கவிபாடும் கீற்றுக்குள்......
நாற்றுடன் நயம் சொல்ல
நாட்டுடமையின் திறம் அள்ள....

கண்டதோர் உபாயமிது...
காண்பதற்கோர் அரிய
வாய்ப்பு இது.....

நெஞ்சில் உரமேற்றி
செஞ்சொற் கவிபாடி.....
அஞ்சறை விரல்களுக்கும்
அரங்கேற்றம் நிகழ்த்திவிடும்
அதிசய சங்கமிது....
ஆர்ப்பரித்துப் பொங்குகிறது....

கொஞ்சும் தமிழ்தன்னை
விஞ்சும் மொழியுண்டோ....?
என அஞ்சும் விழிகண்டு....
பொருட்சுவை சாறெடுத்து
இளநீரில் தேன்வடித்துக்
கொடுக்கும் அற்புதக்
குழாம் அன்றோ....

தன் பெயரை நின்று
நிலைநிறுத்தி ....
என்றென்றும் புகழ்
சேர்க்கும் இவ்வையகத்தின்
குரல் அன்றோ....!

**ச.மோகனாம்பாள்,**
**எம்.ஏ, எம்.எட்,எம்.பில்.,**
**தமிழ் விரிவுரையாளர்,**
**த.வீ.செ கல்வியியல் கல்லூரி,**
**கடலூர்.**



## #என்எண்ணச்சிதறல்கள் #என்எண்ணச்சுவடுகள்

குயில் கீதமிசைக்கும் அந்த அடர் மரமும்
பாழடைந்த பிள்ளையார் கோவிலும்
கால் வரியோடும் நனைந்த வாசலும்
நீண்டு கிடக்கும் ஈரத் தெருவும்
நிழலாடும் நினைவினில்..
இந்த மாலை நேரத்து மெல்லிய மழையினில்...
மனம் நிறைக்கும் மண் வாசனையாய்!!!

**வாணி**

## என் பயணம்

என் கருவிழியில்பட்டு தெறிக்கும்
ஒளிக்கற்றையின் ஊடே என் பயணம்

கரிய போர்வை களைந்து
நீல வானம் நிறைய என் பயணம்

குஞ்சுகளை கூட்டில் விட்டு இறை தேடும்
பறவை ஊர்வல வானில் என் பயணம்.

இரவு தூக்கம் கலைந்து
முகம் மலர, இதழ் விரிக்கும்
மலரின் மொழியில் என் பயணம்.

**பவிப்பு**




# இலக்கியச் சிந்தனை!

அடுக்கடுக்கா எத்தனை கஷ்டம்ப்பா!
"பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்" என்பது சாதாரணமாக வழங்குகிற ஒரு பழமொழி. துன்பம் வந்தால் அடுக்கடுக்காக துன்பம் வரும் என்பதை மிகைப்படுத்தி இராமச்சந்திரக் கவிராயர் தம் பாடலில் விவரித்திருக்கிறார்.



காவிய நாயகன் சுமாரான சொத்துபத்து உள்ளவன். அவனுக்கு வருகின்ற துன்பங்களைப் பாருங்களேன்.
கொல்லைப்புறத்துக் கொட்டகையில் மாடு கன்று போட்டிருக்கிறது.
அதைப் பார்க்கப் போன சமயத்திலே சோ வென்று அடைமழை கொட்டுகிறது.,மழையிலே ஒரு புறத்து வீட்டுச்சுவர் விழுகிறது.,





தனக்குக் கை கொடுப்பதற்காக வைத்திருந்த வேலைக்காரனுக்கு உடம்பு சரியில்லை 104 டிகிரி காய்ச்சல். நிலத்தைப் பார்த்துக் கொள்ளும் அடிமையை கூட்டி வரலாம் என்றால் அவன் செத்துப் போய் இருக்கிறான்.,
மழை வந்த காரணத்தால் நிலம் காய்வதற்குள் விதைக்க வேண்டும் என்று நெல் விதையை எடுத்துக் கொண்டு விரைந்து ஓடுகிறான்.




அதேசமயம் இவருக்கு கடன் கொடுத்தவர் மறித்து நிறுத்தி வாங்கிய கடனை கொடுத்து விட்டு போ




என்று பிடித்துக் கொள்கிறார்.

நிலத்திலேயே, சாவு விழுந்த செய்தியை ஊருக்குள் சொல்லவேண்டும் என்று நடுவிலே ஒருத்தன் இவரிடம் சொல்லிவிட்டுப் போகிறான்,



அதேசமயம் இதுவரை வராத விருந்தாளி இவர் வீட்டுக்கு வருகிறார்.



அவரை வீட்டுக்குள் அழைத்துப் போனால் அங்கு ஒரே களேபரம்.வீட்டில் இருந்த ஒருவரை பாம்பு தீண்டிவிட்டது என்கின்றனர்.

அதேசமயம் வாசலில் யாரோ அழைக்கின்றார்கள்,யாரது என்று கேட்கின்ற பொழுது நிலத்து வரி வசூலிப்பவர் வந்திருக்கிறார்.

இறுதியாக குருக்களும் காணிக்கை கேட்டு கை நீட்டுகிறார்

இனி பாடலைப் பார்ப்போம்.

ஆவீன மழை பொழிய இல்லம் வீழ
அகத்தடியாண் மெய்நோவ அடிமை சாவ
மாவீரம் போகுதென்று விதை கொண்டோட
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ளக்
சாவோலை கொண்டு ஒருவன் எதிரே செல்ல
தள்ள ஒண்ணா விருந்து வர சர்ப்பம் தீண்ட
கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்க
குருக்களோ தட்சணை கொடு என்றாரே!

இந்தப் பாடலை திரும்பத் திரும்பப் படித்துப் பாருங்கள்!அப்புறம் யாராவது உங்களிடம் அடுக்கடுக்காக எத்தனை கஷ்டம்ப்பா என்று அலுத்துக் கொண்டால், மெல்ல இந்த பாடலை எடுத்துவிடுங்கள். அவர்களது சுருங்கிய முகம் புன்னகைப் பூத்த மலராக மலரட்டும்.

**M.சித்ரா, எம்.ஏ, எம்.எட்,எம்.பில்.,**
**அங்கப்பா பதின்ம மேல்நிலைப் பள்ளி,**
**கோவை.**



# நமக்கு சோறுதான் முக்கியம்!



எங்காவது பாஸ்தா பண்டிகை, கேக் பண்டிகை, பர்கர் பண்டிகை கேள்விப்பட்டு இருக்கிறீர்களா? வேறு எந்த நாட்டிலும், எந்த சமூகத்திலும் இல்லாத ஒன்று தமிழர்களிடையே உள்ளது அது நாம் நம் சாப்பாட்டின் மேல் வைத்துள்ள காதல் தான். பொங்கல் என்று பெயர் வைத்து அதை ஆண்டின் ஆகப்பெறும் பண்டிகையாகக் கொண்டாடி, சமையல் பானைக்கு அழகுச் சேர்த்து, சமையலுக்கு நல்ல நேரம் பார்த்து, குடும்பமாக சமைப்பதும் அதைக் கூடி சுவைப்பதுமாக, ரெண்டாயிரம், மூவாயிரம் வருடங்களாக கொண்டாடி வருகிறோம்.

"மூட நெய் பெய்து முழங்கை வழி வார" என்று ஆண்டாள் அந்த காலத்திலேயே அனுபவித்து பாடியிருக்கிறாள். பொங்கல் மேலே பசும் நெய் கொஞ்சம் ஊற்றி...... இல்லை, நெய் பெய்ததாம்பா! (மழை போல), அதுவும் சாப்பிடும் பொழுது முழங்கையில் வடியணுமாம்! அதை கூடி இருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய் என்கிறாள்! அப்படி சாப்பாட்டை கூடி ரசித்து ருசித்து சாப்பிடுகிற கூட்டம் நம்முடையது.



இப்படி சைவ சாப்பாட்டை இத்தனை விதமாகவும் இத்தனை ருசியாகவும் உலகத்தில் வேறு எந்த அடுக்களையிலும் (Cuisine) பார்த்ததில்லை என்று ஒரு வெள்ளைக்கார நண்பர் (Food Connoisseur) என்னிடம் சொல்வார். அது உண்மைதான். உலகத்தில் எல்லோரும் சப்பென்று உப்பு காரம் ஏதும் இன்றி சாப்பிட்ட பொழுது புளி, மிளகு, இஞ்சி, மஞ்சள், மல்லி, பட்டை, கிராம்பு,

ஏலக்காய் ,சீரகம், சோம்பு என்று உலகத்தில் உள்ள எல்லா மசாலா பொருள்களும் வைத்து அறுசுவையாய் சமைத்து சாப்பிட்டது நாம் தான். அவைகள் மொத்தமாய் விளைந்ததும் நம்ம ஊர்ல மட்டும்தான்.

சமையலறையில் உள்ள அஞ்சறை பெட்டி போல உலகத்துக்கே அஞ்சறை பெட்டியாய் நம்ம தமிழகம் இருந்திருக்கிறது. வெறும் ஐநூறு வருஷத்துக்கு முன்னாடி வரை ஐரோப்பாவில் வெல்லம், சர்க்கரை என்றால் என்னவென்றே தெரியாது. அரசர்களுக்கும், செல்வந்தர்களுக்கும் மட்டுமே கிடைக்கக்கூடிய அரிய பொருளாக இருந்திருக்கிறது. நாமோ அப்பம், அதிரசம், அக்கார அடிசில் என்று அப்போதே ஒரு பிடி பிடித்திருக்கிறோம்.

ஒரு காலத்தில் ரோம் நகர தங்கமெல்லாம் முசிறி, கொற்கை, பூம்புகார் செல்வதாக ரோம செப்பேடுகள் சொல்கின்றன. அரேபிய கடற் வணிகம் பெருகுவதற்கு முன் கடற் போக்குவரத்து முழுதும் தமிழர்கள் கட்டுப்பாட்டில் இருந்ததாக கிரேக்க குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. இதற்கு ஆதாரமாக அக்கால கடல் வணிகத்தில் கொடிகட்டி பறந்த செட்டிநாட்டு மக்களின் சமையலில் அத்துணை ஏற்றுமதி மசாலா பொருட்களும் இன்றும் பார்க்கலாம்.
இதோ, எனக்கு பிடித்த சங்க காலத்து சமையல் குறிப்புகள்:

- கடல் இறவின் சூடு (Fire Grilled Shrimps) — பட்டினப்பாலை
- அலவன் கலவை— (Crab Masala) — சிறுபாணாற்றுப்படை
- ஊண்சோறு (Biriyani) — புறநானூறு
- வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும் - (Smoked Eggplant Couscous) — ஔவையார்.



என்ன உங்களுக்கும் வாய் ஊறுதா? போய் உங்களுக்கு பிடித்த சமையலை ஆரம்பிங்க! நமக்குச் சோறு தான் முக்கியம்!!

**வந்தியத்தேவன்,**
**எம். எஸ், TX**



# அகமும் அயலகமும்

அவர் பிள்ளை அமெரிக்காவில் பெரிய மருத்துவராம், இவர் பிள்ளை லண்டனில் பெரிய பொறியாளராம், அப்புறம் அந்த எதிர்த்த வீட்டுக்காரரின் பையன் சௌதியில் சொந்தத் தொழில் துவங்கி வசதியா இருக்காராம் என்றெல்லாம் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்ததால், பிறந்த மண்ணை விட்டு சீமைக்குப் பிழைக்கப் போனால் நிறைய சம்பாதித்து, செல்வம் கொழுத்து, ஆடம்பர வாழ்க்கை வாழலாம் என எண்ணிய நாட்கள் உண்டு. அன்று, அப்போது அமெரிக்காவிற்குப் புலம் பெயரும் முன்னர் தாய்த்திரு நாட்டில் வளர்கையில், பிள்ளைப் பருவத்தில்.




கல்லூரி முடித்து அமெரிக்கா வர முடிவு செய்து தாயாராகிக் கொண்டிருந்த போது பலர் அமெரிக்காவில் அது கிடைக்காது, இது கிடைக்காது என அறிவுரை இலவசமாகக் கொடுக்க ஆரம்பித்தனர். அவர், இவர் என எல்லோர் சொல்வதையும் வாங்கி காதில் போட்டுக்கொண்டு, என்ன உடைகள் வாங்க வேண்டும் எனப் பார்த்து பார்த்து வாங்கி, பிரஷர் குக்கர், சில மசாலா பொருட்கள், காய வைத்த கருவேப்பிலை இப்படியானப் பொருட்களை நிரப்பி, இரண்டு பெட்டிகளை தயார் செய்து, தொலைக்காட்சியில் ஆங்கில நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்து அமெரிக்க ஆங்கிலத்தை புரியவும், அந்த உச்சரிப்பில் பேசவும் கற்றது பல யுகங்களுக்கு முன் நிகழ்ந்தனப் போலிருந்தாலும் மூளைப்பரண்களில் நினைவு மூட்டைகளாக இன்றும் கிடக்கின்றன.



அப்போது அமெரிக்கா போகப்போறோம் என்ற மகிழ்ச்சி என்றாலும் முதன்முறை விமானப்பயணம், முதன்முறை தாய் நாடு விட்டு, தாய் கூடு விட்டு இடம் பெயர்வது அடி வயிற்றில் ஏதோ செய்துக் கொண்டிருக்க ஒரு வழியாக அமெரிக்க மண்ணில் காலடி எடுத்து வைத்த நினைவலைகள் இன்னமும் நெஞ்சாழியின் கரைகளை உரசிய வண்ணம் மோதிப் போகின்றன.



அயலகம் வந்த புதிதில் அமெரிக்க நாட்டின் கலாச்சாரம், மொழி, இங்கு வாழ்பவரின் பழக்கவழக்கங்கள், வானிலை மாற்றங்கள், பேசும் முறைகள், பழகும் விதங்கள், உணவு முறைகள் ஈதனைத்தும் கற்றல், வீடு தேடுதல், சாலைகள் பழகுதல், கல்லூரி செல்லுதல், வேலைத்தேடுதல், குடியிரிமை பெறுதல் இப்படி வருடங்கள் விரைந்தோட, தாய் மண்ணின் ஏக்கமும், உறவுகள் அருகாமை இல்லாமையும் பெரிதாக நம்மைத் தாக்க நமக்கு நேரம் போதுவதில்லை. புது நாட்டு மோகத்தில் புத்துணர்வோடும், ஆனால் ஒரு வித பதட்டத்தோடும் சில ஆண்டுகள் ஓடிவிடுகின்றன.

அவ்வப்போது தாய் நாடு திரும்பி விடுவோம் என்ற எண்ணங்களும் பேச்சுகளும் தோன்றி மறையும். பின் கல்லூரி படிப்பு முடித்தோ, வேலைத் தேடியோ, பிள்ளைகள் பெற்று, வீடு வாங்கி, வாகனம் வாங்கி கூடவே ஒரு நாயும் தத்தெடுத்து அமெரிக்கக் கனவு / அமெரிக்க டிரீம் என்பார்களே அதைப் பூர்த்தி செய்தாயிற்று என மூச்சுவிடும் போது தான் பிறந்த மண்ணையும், மரபையும்,



மொழியையும், உறவுகளையும், வாழ்க்கை முறைகளையும், சில நெறிகளையும் விட்டு நீண்ட தூரம் வந்துவிட்டிருக்கிறோம் எனும் ஏக்கங்கள் தொண்டாங்குழி இறங்கி விழுங்கவும் முடியாத துப்பவும் முடியாத நிலைக்கு நம்மைத் தள்ளும்.



என்னதான் வசதியான வீட்டில், சமைக்க, கழுவ, துவைக்க மின் இயந்திரங்கள் வைத்துக் கொண்டு, உயர்ந்த வாகனங்களில் பிரயாணித்து வாழ்ந்தாலும் தாய் நாட்டில் இல்லாமை, உறவுகளின் அருகாமையில் இல்லாமை போன்றவையும் இன்னும் அன்றாட வாழ்க்கையின் சின்னச் சின்ன ஏக்கங்களும் மனதில் ஒவ்வொன்றாக சேர்ந்து, மலையாகக் குவிந்து அகம் கனக்க ஆரம்பித்து நம் உயிரில் பாதி இங்கு நம்மிடமும், மீதி தாயகத்தில் கிடப்பதாகவும் உணரும் நிலை நமக்கு வந்துவிடும்.

வெளி நாட்டு வாழ்க்கையென்றால் பணம், மகிழ்ச்சி குதூகலமே அல்ல. ஏக்கங்கள், ஏமாற்றங்கள், வலிகள், தீராத ரணங்கள், கவலைகள் நிறைந்தவை என்பதை பெரும்பாலும் தாய் நாட்டிலுள்ளோர் உணர்வதில்லை. ஏனென்றால் அவர்களுக்கு அந்த அனுபவம் இல்லை. ஏதோ சினிமாவில் பார்த்து, அல்லது பிறர் சொல்லக் கேட்டு கற்பனையில், எதையெதையோ நினைத்து புலம் பெயர்ந்தவரை பார்க்கின்றனர்.

எனக்கு நினைவிருக்கிறது முதன்முறை தாயகம் போன போது இங்கு கிடைக்கும் சாக்கலேட்டுகள் வாங்கிப் போனால் எங்கள் நெருங்கிய உறவினர் ஒருவர் அமெரிக்காவிலிருந்து தங்க பிஸ்கட்டுகள் வாங்கி



வராமல் இந்த மிட்டாய் தான் கிடைத்ததா வாங்கி வர. இது இங்கேயே கிடைக்காதா என்றாராம்.

புலம் பெயர்ந்தவர்கள் நம் கலாச்சாரத்தை, பண்பாட்டை, மரபை, மொழியை மறந்துவிடுகிறார்கள் என்று பலர் நினைப்பதுண்டு. ஆனால் உண்மை என்னவென்றால் புலம் பெயர்ந்தவர்கள் தான் நம் மொழியையும், மண்ணையும், மக்களையும், பண்பாட்டையும் தாயகத்தில் வாழ்வோரைவிட அதிகம் நேசிக்கிறார்கள். இல்லாத போது தான் ஒன்றின் அருமை உணர முடியும் என்பது இதற்கு மிகப் பொருந்தும்.

மேலும் அமெரிக்காவில் பிள்ளைகள் இருக்கும் பெற்றோரிடம் உங்களுக்கென்ன உங்கள் பிள்ளை அமெரிக்காவில் சம்பாதிக்கிறார். காசு நிறைய அனுப்புவார் என ஒருவகை காழ்ப்புணர்ச்சியுடன் பிறர் சொல்ல நாம் கேட்டிருக்கிறோம். யாருக்காவது ஏதாவது என்றால் உடனே பண உதவி கேட்பது வெளிநாடு வாழ் தம் உறவினரிடம் தான். வெளி நாடு என்றாலும் அந்தந்த நாட்டின் வாழ்க்கைக்கேற்பத் தேவைகளுக்கேற்பத் தான் அவரவர் சம்பாதிக்க இயலும் என்ற உணர்வு கொஞ்சமும் பெரும்பாலான நம் மக்களிடம் இருப்பதில்லை.

அயலகம் என்பதாலேயே இங்கு வாழும் வாழ்க்கை எளிதானதல்ல. காலையில் எழுந்து பிள்ளைகளை பள்ளிக்கு தயார் செய்து அனுப்பி, தாமும் வேலைக்குப் போய் திரும்பி பிள்ளைகளுக்கு வீட்டுப்பாடம் சொல்லிக் கொடுத்து, சமைத்து, வீட்டு வேலைகள் முடித்து படுக்கப் போவதற்குள் நாள் முடிந்து விடும். மீண்டும் அதே போல அடுத்த நாளும். வாரக்கடைசிகளில் அடுத்த வாரத்திற்கு தேவையான பொருட்கள் வாங்குவது, பிள்ளைகளுக்கு பாட்டு வகுப்பு, நடன வகுப்பு, இப்படியான வகுப்புகள், வீடு சுத்தம் செய்வது, துணிகள் துவைப்பது என ஓடிவிடும். இதில் கெட் டு கெதர் என ஒன்று வைத்து நண்பர்கள் ஒன்று கூடினால் அதற்கும் சமைத்தாக வேண்டும். ஒரு வகையான இயந்திர வாழ்க்கையில் ஏதோ நாமும் நன்றாக வாழ்கிறோம் என்ற நினைப்பில் நாட்கள் நகரும். அவ்வளவே.



தீபாவளி, பொங்கல், கார்த்திகை தீபம், தைப் பூசம் போன்ற பண்டிகைகள் தாய் நாட்டைப் போல் ஆரவாரத்தோடு அல்லாமல் அமைதியாக வந்து கடக்கும். தினம் காலை வாசல் தெளித்து கோலம் போடுவது போன்றவை மறந்து போனவை.



ஊரோடு ஒத்து வாழ நாமும் நம் நடை, உடை, பாவனை அனைத்தும் மாற்றி வாழும் போது, எப்போதாவது கோயிலுக்குப் போகும் போதோ, தமிழ் சார்ந்த நிகழ்ச்சிகளுக்கு போகும் போதோ தான் சேலை, வேட்டி, நம் நாட்டு நகை, கொலுசு, வளையல்கள், பொட்டு போன்றவை அணிய சந்தர்ப்பங்கள் அமையும்.



மதங்கள் கடந்து கிறிஸ்மசுக்கு, கிறிஸ்மஸ் மரம் வைத்து, வீட்டை அலங்கரிப்பது, பரிசுகள் பகிர்வது போன்றவை கடைபிடிக்கலாவோம். ஹாலோவீன், காதலர் தினம், தேங்க்ஸ்கிவ்விங் போன்ற பண்டிகைகள் பிள்ளைகளுக்காக கொண்டாடுவோம்.

பிள்ளைகள் இங்கு பிறந்து வளர வளர தாய் நாடு திரும்பினால் இவர்களால் அந்த வாழ்க்கை முறைகளை ஏற்று வாழ இயலுமா என்ற கவலைகள் தொற்ற, நாடு திரும்பும் எண்ணம் கொஞ்சம் கொஞ்சமாக நம்மில் மாறும்.

நாய் வேஷம் போட்டால் குரைத்து தானே ஆகவேண்டும் என்பது போல, என்னதான் நம்மை நாமே மாற்றி வாழ்ந்து கொண்டிருந்தாலும் தாய் நாட்டின் ஏக்கம் எப்பொழுதுமே அகத்துள் நீங்காது ஓடிக்கொண்டிருக்கும். இந்த நாடும், மண்ணும், மக்களும் நமக்கானவர் அல்ல என்ற உணர்வு நம்மை அறியாமலே நம்முள் தேங்கி தேம்பிக் கொண்டே இருக்கும்.

தாயகத்தில் மழை வரும் முன் முதல் துளிகள் பூமியில் விழும் போது ஒரு ஈர வாசனை வருமே அந்த மண் வாசனைக்கு மனம் ஏங்கும்.



மாலையானால் கடைவீதிகளுக்குப் போகும் போது வீசும் மல்லிகைப்பூ வாசத்திற்கும், சாலையோர தின்பண்டங்கள், நம் நாட்டு பழங்கள் வாசனைக்கும் நாசி ஏங்கும். அங்குக் கேட்கும் வாகனச் சத்தங்களுக்கும், மக்கள் ஒலிகளுக்கும், தூரத்தில் கேட்கும் பாட்டுகளுக்கும் செவிகள் தவிக்கும்.



தாயின் அழைப்புக் குரல், தந்தையின் அம்மாடி எனும் சொல், அண்ணன் தம்பியின் செல்ல சண்டைகள், தாத்தா, பாட்டி, மாமா, அத்தை, சித்தி பெரியம்மா என்றெல்லாம் உறவு பாராட்டும் சொற்களுக்கு உயிர் விம்மும்.

கொஞ்சமும் யோசிக்காமல் ஆட்டோக்காரரை அண்ணா என்றழைப்பது, பக்கத்து வீட்டு அம்மாவை ஆண்ட்டி என்றழைப்பது, கடைக்காரரை அங்கிள் என்பதெல்லாம் இங்கு கிடையாது.

வாழையிலையில் சோறு உண்டு எவ்வளவு நாளானது எனத் தோன்றும். காய்ந்துப் போன முருங்கைக்காய்க்கு, ஆறு அமெரிக்க டாலரா என எண்ணி வாங்காது வரும் போது, கருவேப்பிலை நாலைந்து இலைகளுக்கு இரண்டு டாலர் கொடுக்கும் போது நம் நாட்டு காய்க்கடைகள் நினைவுக்கு வரும்.

சிறு வயதில் அக்கா!, அக்கா! என நிழல் போல பின் திரிந்து, ஒரே தட்டில் உணவு உண்டு, ஒன்றாக வளர்ந்த சித்தி மகளான தங்கைத் திருமணம் என்றாலும், போக இயலாத விசா தொல்லை வரும். மனம் கொஞ்சம் அன்று இறக்கும்.





தோள் மீதும், மார் மீதும் தூக்கி வளர்த்த தாத்தா மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பகுதியில் எனும் செய்தி வரும் போது உன்னைப் பார்க்கணும் போல இருக்குன்னு சொல்றார்மா தாத்தா என அம்மா அலைபேசியில் கூற நாம் மறுமுனையில் அழ இன்னும் ஓரிரு நாட்களில் பயண ஆயத்தம் செய்து ஊர் போய் சேரும் போது தாத்தாவின் இறுதிப் பயண ஊர்வலம் இடுகாட்டிற்கு நடந்து கொண்டிருக்க அவர் கண்கள் நம்மைப் பார்க்க முடியாத நிலையில், அவரின் விரைத்த நெற்றியில் ஒரு கடைசி முத்தம் கொடுத்து கதறக் கூட முடியாத நிலையில் நின்ற நிலை நம்மை காலத்திற்கும் வருத்திக் கொண்டே இருக்கும்.

பத்து மாதம் சுமந்துப் பெற்று, தாலாட்டி, பாலூட்டி ஆளாக்கியத் தாய் உடல் நிலை குன்றி கீழே விழுந்து நடக்க முடியாமல் தவிக்கும் போது அவருக்கு உடனிருந்து பணிவிடைச் செய்ய இயலாமல் ஆள் தேடி வைத்து விட்டு நாடு திரும்பும் நிலை குற்ற உணர்ச்சியாக மாறி, சதா நம் நிம்மதியை அறுத்துக் கொண்டிருக்கும்.

மகளே என அன்பு பொங்க அழைக்கும் சித்தப்பாவிற்கு இதயத்தில் அறுவை சிகிச்சை என்பார்கள், ஆசையோடு மருமகளே எனும் மாமா தவறி விட்டார் என்பார்கள், அத்தை என்றழைக்கும் அண்ணன் மகளுக்கு நிச்சயதார்த்தம் என்பார்கள், சித்தி குழந்தைக்கு மொட்டை போடுகிறோம் என்பார்கள், அனைவரும் கோயிலில் பொங்கல் வைக்கக் கூடுகிறோம் என்பார்கள். ஆனால் நமக்கு எந்த நல்லதுக்கும், கெட்டதுக்கும் போய் கலந்து கொள்ள முடியாத சூழலாகவே இருக்கும்.



பிறகு நமக்கு கொஞ்சம் வயதாகும் போது, நம் பெற்றோர் வயது கூடும் போது, உடல் உபாதைகள் அவர்களை ஆட்கொள்ளும் போது அலைபேசி அடித்தாலே தாயக எண் என்றால் ஹலோ எனும் போதே மனமும், கைகளும் நடுக்கம் கொடுக்கும். மறுமுனையில் சும்மா தான் அழைத்தேன் என்பதைக் கேட்டால் தான், அந்த நடுக்கம் சற்று ஓயும்.

அயலகம் வந்தப்பின் தான் தாய் மொழி மேலும் தாய் மண்ணின் மீதும் நாம் வைத்திருக்கும் பற்று நமக்கே புரியும். தாயகத்தில் இயற்கை பேரிடர் என்றாலோ, எதாவது துயர் என்றாலோ அங்கு இருக்கும் போது அவ்வளவாக துடிக்காத அகம் நம்மை அறியாமலேயே அயலகத்திலிருக்கும் போது பலமடங்கு அதிகமாகத் துடித்து எதாவது செய்தாக வேண்டும் எனச் செயல்பட ஆரம்பிக்கும்.




நாம் வாழும் வளர்ப்பு நாட்டில் நடக்கும் நிகழ்வுகளைவிட, நடவடிக்கைகளைவிடத் தாயகத்தில் நடக்கும் நிகழ்வுகளைப் பற்றித் தேடித்தேடி தகவல் சேகரித்துக் கொண்டிருப்போம். .அங்கு நடக்கும் அரசியல், அதிகாரம், ஊழல், அநீதி, பேரிடர், பெருந்தொற்றுப் போன்றவை நம்மைப் பெரிதாகத் தாக்கும்.

ஆக, மொத்தத்தில் அயலகத்தில் ஆடம்பரம் இருந்தாலும் அகத்தில் ஏக்கமும், தவிப்பும் இருந்துக்கொண்டே தான் இருக்கும். பாதி மனமும், உயிரும் தாயகத்தையே சுற்றி சுற்றி வந்துக் கொண்டிருக்கும். பிள்ளைப் பருவ நினைவுகள் வந்து நம்மை வாட்டும். நம் பிள்ளைகளுக்கு அத்தகைய நினைவுகளைக் கொடுக்க இயலவில்லையே என மனம் கிடந்து



தவிக்கும்.

அமெரிக்கா வரும் வரை
ஆங்கிலம் என்றால் அறிவு
என எண்ணும் அகம்
அயலகம் வந்தப்பின்
தமிழுக்கு நிகர் ஏதுமிலை
என உணரும். தமிழ்ப் பேசத்
தவிக்கும்.

அமெரிக்கா வரும் வரை
மேற்கத்தியப் பொருட்களுக்கு
தாகம் கொள்ளும் அகம்
அயலகம் வந்தப்பின் சேலை,
வேட்டி, கொலுசொலிக்கு
ஏங்கும்.

அமெரிக்கா வரும் வரை
பீட்சா, பர்கெர் உண்ணுவதை
ஆசைப்படும் அகம்
அயலகம் வந்தப்பின்
இட்லி, தோசை, சாம்பார்
கேட்கும்.

அமெரிக்கா வரும் வரை
ரோஜாவை பெரிதென்று
நினைக்கும் அகம்
அயலகம் வந்தப்பின்
மல்லிகைக்குத் தவியாய்த்
தவிக்கும்


அமெரிக்கா வரும் வரை
உறவுகளிடம் ஒட்டாமல்
விலகி இருக்க நினைக்கும்
அகம் அயலகம் வந்தப்பின்
உறவுகளைத் தேடித்தேடி
அலையும்

அமெரிக்க ஆடம்பரத்தில்
வாழ்க்கை இயந்திரமாகச் சுழலும்
போது, அகம் தாய்மண்ணில்
தன் பாதி உயிரை
வைத்து மீதிப் பாதியில்
தான் இங்கு வாழ்ந்து
கிடக்கும்

சொர்க்கமே என்றாலும் தாயகத்தைப் போல வராது. எனவே அயலக வாழ்க்கையில் முழு மகிழ்ச்சி இல்லை என்பது தான் உண்மை . ஏக்கமும், தவிப்பும் அயலகத்தில் நம் அகத்தின் அன்றாட நிலை.

**-புவனா கருணாகரன்,**
**எம். எஸ், NJ**






# விடுகதை

1. பூ பூக்கும், காய் காய்க்கும், ஆனால் பழம் பழுக்காது. அது என்ன?

2. கடலிலே கலந்து, கரையிலே பிரிந்து, தெருவிலே திரியும் பூ எது?

3. பல் துலக்காதவனுக்கு உடம்பு எல்லாம் பற்கள். அது என்ன?

4. உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம். அது என்ன?

5. பெட்டியைத் திறந்தால் பூட்ட முடியாது. அது என்ன?

விடைகளை உங்கள் முழுப் பெயருடன் அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி: keetru@sbtsla.org சரியான விடைகளை அனுப்பும் நபரின் பெயர் அடுத்த இதழில் அறிவிக்கப்படும்.

# மாமல்லபுரம்





# அறிந்ததில் பிடித்தது

இவ்வுலகில் பல்வேறு இடங்களில் பல்வேறு விதங்களில் ஒரு நபரையோ அல்லது ஒரு நிகழ்வையோ நினைவுக்கூறும் விதமாகச் சிலைகளை எழுப்பியுள்ளனர். நாம் தான் காலப்போக்கில் அதன் காரணத்தை கண்டறிய தவறி விட்டோம். அப்படி சமீபத்தில் நான் அறிந்துக் கொண்ட ஒரு விடயத்தை உங்களுடன் பகிர்ந்துக் கொள்ள விழைகிறேன். நாம் பல இடங்களில் பல்வேறு விதமான சிலைகளைப் பார்த்திருப்போம். அதில் மாவீரன் ஒருவன் குதிரையின் மேல் அமர்ந்திருக்கும் சிலையும் ஒன்று. இதில் என்ன சிறப்பு இருக்கிறது என்று எப்போதாவது நாம் சிந்தித்துப் பார்த்ததுண்டா? குதிரையின் கால்களைக் கொண்டு அக்குதிரையின் மேல் அமர்ந்திருக்கும் மாவீரனுடைய வீரத்தையும்,தியாகத்தையும் நாம் தெரிந்துக் கொள்ளலாம்.



ஒரு மாவீரன் போரில் வீரமரணம் எய்தினால், அவனது வீரத்தையும், தியாகத்தையும் போற்றி நினைவுக்கூறும் விதமாக, குதிரை தன் முன்னங்கால்கள் இரண்டையும் மேலே தூக்கியவாறு, குதிரையின் மேல் அம்மாவீரன் அமர்ந்திருப்பதைப் போன்ற சிலையை வடித்தனர். அதுவே



அவன் போரில் படுகாயமடைந்து போருக்கு பின் மரணத்தை தழுவினால், குதிரை தன் முன்னங்கால் ஒன்றை மட்டும் மேலே தூக்கியவாறு இருக்கும். ஒரு வேளை அந்த வீரன் இயற்கையாக மரணம் எய்தினால்



அவனது வீரத்தைப் போற்றும் விதமாக ஒரு குதிரையின் மேல் அவன் அமர்ந்திருக்கும் படியான சிலையை வடித்து வைத்தனர்.



இனி எந்தவொரு சிற்பத்தையோ, சிலையையோ பார்த்தாலும் அதன் அழகை மட்டுமின்றி ஏன் அவற்றை எழுப்பினர் என்ற காரணத்தையும் கண்டறிய முயல்வோம்.

**சுபா ஹரி**

## #என்எண்ணச்சிதறல்கள் #என்எண்ணச்சுவடுகள்

படர்ந்திருக்கும் ஈரங்களில்
பதித்து வந்த பார்வைகள்...
சிதறி கிடக்கும் சுவடுகளில்
சேர்த்து விட்ட சிந்தனைகள்...
ஏற்பதும் இன்றி எறிவதும் இன்றி
செலவு இல்லா சில்லரைகள்
வாழ்வின் இனிமைகள்!!!


**வாணி**

### கடி ஜோக் #1

மரியாதையாக திட்ற ஊர் எது?

திருச்சி

# காலத்தை வென்ற காவியத்தலைவன்



யாம் அறிந்த புலவரிலே கம்பனைப் போல்,
வள்ளுவர்போல் இளங்கோவைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை!
இது மஹாகவி பாரதியின் வரிகள். இந்தப் பட்டியலில் இடம் பெரும் தகுதி இன்னொரு கவிஞருக்கும் உண்டென்றால் அது கவி பேரரசு கண்ணதாசன் என்பேன்.

வாழ்வில் வரும் எல்லா சூழ்நிலைகளுக்கும் எல்லா தருணங்களுக்கும் பாடல்கள் தந்து, தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நீங்கா இடம் பிடித்தவர் கவி பேரரசர். அவருக்குப் பல பரிமாணங்கள் உண்டு அவற்றில் என்னை மிகவும் பாதித்த சிலவற்றை உங்களுடன் பகிர்ந்துக் கொள்ள விரும்புகிறேன்.

அவர் தமிழ் சமூகத்திற்கு ஒரு வழிகாட்டியாக தனது பாடல்கள் மூலம் வாழ்ந்து காட்டி இருக்கிறார். அவரது பல பாடல்கள் சோர்வுற்ற மனதிற்கு உற்சாகத்தையும், தைரியத்தையும் அளித்திருக்கிறது. உதாரணத்திற்கு அவரது "மயக்கமா கலக்கமா" என்கிற பாடலின் வரிகளை கேட்டால் எங்கிருந்தோ ஒரு தெம்பு பிறக்கும்.

அவர் சமூகத்தின் மனசாட்சியாகவும், அதனுடைய பிம்பமாகவும் திகழ்ந்தவர். "மனிதன் மாறி விட்டான்" என்ற பாடலின் மூலம் இந்த சமூகத்தில் மனிதனிடம் ஒளிந்திருக்கும் போலித்தனத்தையும் கபடங்களையும் வெளிச்சம் போட்டு காட்டி இருப்பார். "நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்" பாடல் மூலம் அந்த படத்தின் கதையை மட்டுமல்லாமல் வாழ்க்கையில் உள்ள ஏமாற்றங்களை




எதிர்கொள்ளும் சித்தாந்தத்தைக் கூறி இருப்பார்.
சித்தி படத்தில் வரும் "காலம் இது காலம் இது" பாடலில் பெண்களின் வாழ்க்கையை மிகவும் ரசிக்கும் படியாக சித்தரித்திருப்பார்.
பல காவியங்களின் சாரத்தை பாமர மக்களுக்கு எடுத்து உணர்த்தியவர் கவியரசர். உதாரணத்திற்கு மகாபாரதத்தின் சாரத்தை "உள்ளத்தில் நல்ல உள்ளம்" என்ற பாடல் மூலமாக எளிமையாக எடுத்துரைத்திருப்பார்.
"எங்கிருந்தாலும் வாழ்க" என்கிறப் பாடலில் தன்னை விரும்பிய பெண் வேறொருவரை மணந்தாலும் அவள் நன்றாக இருக்க வேண்டும் என்று வாழ்த்தும் வரிகளை நம் சந்ததியர் கேட்கும் பாடல்களில் கேட்க முடிவதில்லை என்பது மிகவும் வருத்தத்திற்குரியது.
"நீரோடும் வைகையில்" என்ற பாடலில் "நெய் ஊரும் கானகம்" என்ற ஒற்றை வரியில் ஒரு அழகிய வனத்தின் இரவை அவரது வார்த்தைகளால் ஒரு ஓவியமாய் வரைந்திருப்பார்.
பழமையின் பெருமையையும் புதுமையின் நவீனத்தையும் அவரது பாடல்களில் உணரலாம். இன்றும் அவரது பாடல்கள் தற்கால சிந்தனைகளை பிரதிபலிக்கும் விதத்தில் அமைந்திருக்கும் அவற்றை ஒவ்வொரு முறை கேட்கும் பொழுதும் நமக்கு புது பரிமாணங்கள் தோன்றும்.
காலங்கள் கடந்து வாழும் படைப்புகளில் சிலவற்றை தான் இங்கே கூறியிருக்கிறேன். படிக்கும் பொழுதே உங்கள் மனதை பாதித்தப் பல பாடல்கள் உங்களுக்கு தோன்றும், அவற்றை உடனே கேட்டு மகிழ்ந்து அந்தக் காவியத் தலைவனுக்கு வாழ்த்து தெரிவிப்போம் வாருங்கள்.

**சங்கீதா கௌரிஷங்கர்**

# "கன்னியாகுமரி" தமிழகத்தின் பெருமை

**த**மிழ் நாட்டின் தென் முனையான குமரி மாவட்டத்தின் நாகரிகமானது, சுமார் 4000 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. தமிழின் ஐந்திணைகளில், நான்கு திணைகள் ((முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல்) ஒருங்கமைந்த மாவட்டமாக குமரி உள்ளது. இயற்கை அழகிற்குப் பெயர் போன இம்மாவட்டத்தில், ஒன்பதாம் நூற்றாண்டுக்கும் முந்தையப் பல வரலாற்றுச் சின்னங்கள் அமையப்பெற்றதால் தமிழ் அறிஞர்களுக்கும் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கும் ஏற்ற இடமாக திகழ்கிறது.



சிவபெருமானை அடைவதற்காக பார்வதி, "கன்னியாக" நின்ற முனையின் காரணமாக 'கன்னியாகுமரி' என்று அழைக்கப்பட்டதாக ஒரு கருத்தும், குமரிக் கண்டம் அழிந்த பிறகு, அங்கிருந்து வந்த பெண் தன் நாயகனுக்காக காத்திருந்த இடம் என்ற பொருளிலும் இப்பெயர் பெற்றிருக்கலாம் என ஒரு கருத்தும் உள்ளது. பகவதி அம்மன் இங்கு கன்னியாகவும், குமரியாகவும் அருள் புரிவதால் இந்த பெயர் வந்ததாக ஐதீகம் எனச் சொல்வோரும் உண்டு. கன்னியாகுமரியின் பழையப் பெயர் "ஆயுத்யா நாடு" எனவும், கொரிய இளவரசி ஹியோ ஹவாங் ஒக்(செம்பவளம்) பிறந்த இடம் இதுதான் என்பது ஒரு சில அறிஞர்களின் கருத்தாக உள்ளது.

குமரி மாவட்டம் கைவினைப் பொருட்களுக்கும், ரப்பர் உற்பத்திக்கும் பெயர் போன மாவட்டமாகும்.

இம்மாவட்டத்தின் பொருளாதாரத்தில் ரப்பர் உற்பத்தி முக்கியப் பங்கு வகிக்கிறது. இருநூறுக்கும் மேற்பட்ட இன மீன்கள் கன்னியாகுமரி கடல் பகுதிகளில் கிடைக்கின்றன. கல்வியறிவு விகிதத்திலும், கல்வித்தரத்திலும் குமரி மாவட்டம் தமிழகத்தில் முதலிடம் வகிக்கிறது. முக்கடல் சங்கமிக்கும் இடமாகவும், உலகின் வேறு எங்குமே இல்லாத வகையில், சூரியன் உதயத்தினையும், சூரியன் மறைவினையும் ஒரே இடத்தில் பார்க்கும் வடிவமைப்பையும் பெற்றுள்ள கன்னியாகுமரியைப் போற்றி பாதுகாப்போம்.

**R.இராஜலஷ்மி,**
**நாகர்கோயில்.**

## சொர்க்க பூமி

இயற்கை எழில்மிக்க அரணே!
மனிதனின் படைப்பாற்றலை மிஞ்சிய உச்சமே!
கடல் மாதாவால் ஆசிர்வதிக்கப்பட்ட நிலமே!
தெய்வங்கள் தரிசிக்க விழையும் விருப்ப பூமியே!
என் கன்னியாகுமரியே...!
அவரவர்க்கு அவரவர் சொந்த ஊர் சொர்க்கமே!
எனக்கும் "என் கன்னியாகுமரி" என்றால் அலாதிப் பிரியம்!!

**- சத்யா முருகன்,**
**நாகர்கோயில்.**

**கடி ஜோக் #2**

டயட் கண்ட்ரோல் இல்லாத ஊர் எது?


வத்தல'குண்டு'



# ஐந்து பெரிது ஆறு சிறிது!

ஐந்து பெரிது ஆறு சிறிது. இது என்ன புது கணக்கு? என்பார்கள் சிலர். கணிதத்தில் நான் பூஜியம் என்பார்கள் சிலர். தன் கணித ஆசிரியரையும் தேடுவர் பலர். மீண்டும் சொல்கிறேன் ஐந்து பெரிது ஆறு சிறிது!

ஐந்தறிவு விலங்கு, பறவைகளிடமிருந்து கற்க வேண்டியவனாக ஆறறிவு படைத்த மனிதன் இன்றளவும் உள்ளான் என்பதை பதிவு செய்ய விழைகிறேன்.



சிங்கத்திடமிருந்து கம்பீரத்தையும்,
புலியிடமிருந்து வீரத்தையும்,
நரியிடமிருந்து தந்திரத்தையும்,
மானிடமிருந்து சார்வீக சாது தன்மையையும்,
எருமையிடமிருந்து பொறுமையையும்,
நாயிடமிருந்து நன்றியையும்,
யானையிடமிருந்து பலத்தையும்,
காகத்திடமிருந்து ஒற்றுமையையும்,
மயிலிடமிருந்து நடனத்தையும்,
குயிலிடமிருந்து பாட்டுத் திறனையும்,
கிளியிடமிருந்து பேச்சாற்றலையும்,
குருவியிடமிருந்து சேமிப்பையும்,
முயலிடமிருந்து வேகத்தையும்,
ஆமையிடமிருந்து விவேகத்தையும் கற்க வேண்டியவனாக உள்ளான்.



கவிப்பேரரசு வைரமுத்துவின் வரிகள் என் நினைவுக்கு வருகின்றன.



சீ மிருகமே!
என்று
மனிதனைத் திட்டாதே
மனிதனே.

எந்த விலங்கும் இரைப்பைக்கு மேலே இன்னொரு வயிறு வளர்ப்பதில்லை.
எங்கேனும் தொப்பைக் கிளியோ அல்லது தொப்பை முயலோ பார்த்ததுண்டா?
எந்த விலங்குக்கும் சர்க்கரை வியாதியில்லை, தெரியுமோ!

எந்தப் பறவையும் கூடுகட்டி வாடகைக்கு விடுவதில்லை, எந்த விலங்கும் தேவையற்ற நிலம் திருடுவதில்லை.

பூகம்பம் வருகுது எனில்,
அலைப்பாயும் விலங்குகள்
அடிவயிற்றில் சிறகடிக்கும் பறவைகள்!

இப்போது சொல்லுங்கள் அறிவில், ஐந்து பெரிதா? ஆறு பெரிதா?

-தீபிகா நல்லிக்குமார்.



# தீயில் எரிந்த யாழ் நூலகம்

1981 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் நாள் இரவு ஆரம்பமான இன வன்முறைகளின் போது தமிழர்களின் அறிவுக் களஞ்சியமாக திகழ்ந்த யாழ்ப்பாண பொது நூலகம் முற்றாக எரியூட்டப்பட்டது. இந்நிகழ்வு 20 ஆம் நூற்றாண்டின் இன, கலாச்சார அழிப்புகளில் ஒரு மிகப் பெரும் வன்முறையாக கருதப்படுகிறது.



இவ்வழிப்பு நேர்ந்த காலக் கட்டத்தில் யாழ் நூலகம் கிட்டத்தட்ட 97,000 அரிய நூல்களுடன் தென்கிழக்காசியாவிலேயே மிகப் பெரிய பொது நூலகமாகத் திகழ்ந்தது. நூலகம் எரிக்கப்பட்டது ஈழத் தமிழ் மக்கள் மட்டுமின்றி அனைத்து தமிழ் மக்களிடையேயும் அழியாக் காயம் ஒன்றை ஏற்படுத்தியது.

உலகில் வேறு எங்கும் இல்லாத நூற்றாண்டு பழமை வாய்ந்த ஓலைச்சுவடிகள், நூல்கள், வரலாற்று ஆவணங்கள், 1800-களில் யாழ்ப்பாணத்தில் வெளியான பலப் பத்திரிகைகளின் மூலப் பிரதிகள் என மிகப் பெரிய எண்ணிக்கையிலான பொக்கிஷங்களை யாழ் பொது நூலகம் தன்னகத்தே கொண்டிருந்தது. நூற்றாண்டுகள் பழமையான ஓலைச்சுவடிகள் இங்கு பத்திரப்படுத்தப் பட்டிருந்தன.

இன்று இதன் கட்டிடம் மீளமைக்கப்பட்டும் புதிய நூல்கள் சேர்க்கப்பட்டிருப்பினும், எரிந்துப் போன பல நூல்களும், பழமை வாய்ந்த கையெழுத்துப் பிரதிகளும், ஏட்டுச் சுவடிகளும் வேறு பல ஆவணங்களும் திரும்பப் பெற முடியாதவையே.....

**-கலா சிவா,**

**கனடா.**



# பழமொழியும் அதன் விளக்கமும்

அற்பனுக்கு வாழ்வு வந்தால்
அர்த்த இராத்திரியில் கொடை பிடிப்பான்...

**விளக்கம்**:
அர்பணித்து வாழ்ந்து வந்தால் அர்த்த இராத்திரியிலும் கொடை கொடுப்பான் ...என்பதே உண்மையான பழமொழி. வள்ளல் ஆனவரை கஞ்சனாக மாற்றிவிட்டோம் காலப்போக்கில்...

ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டி ஆவான்....

**விளக்கம்**:
1. ஆடம்பரமாய் வாழும் தாய்;
2. பொறுப்பு இல்லாமல் போகும் தகப்பன்;
3. ஒழுக்கம் தவறும் மனைவி;
4. துரோகம் செய்யும் உடன் பிறப்பு;
5. பிடிவாதம் பிடிக்கும் பிள்ளை.

இந்த ஐந்தும் கொண்ட எந்தக் குடும்பமும் முன்னுக்கு வராது என்பதே பொருள்.

-**இராஜேஸ்வரி இராமச்சந்திரன்**

**கடி ஜோக் #3**

சென்னையில் முட்டை அதிகமாக கிடைக்கும் இடம் எது?

Egg more

# தமிழர் திருவிழா- தைப் பொங்கல் திருவிழா

பண்டையக் காலம் முதல் தமிழர்கள் இயற்கையை ஒன்றிய வாழ்க்கை முறையை வாழ்ந்தும் கொண்டாடியும் வருகின்றனர். பருவம் மாறும் காலங்களில் நீர் நிலைகளில் விழா எடுப்பது தமிழ் மரபு. ஏரியோ, குளமோ, ஆறோ, மலை அருவியோ- 6 பருவக் காலமும் நீர் விழாக்களே!



தை மாதம்- தை நீராடல், புது வெள்ளம், பனிக்காலம். தமிழர்கள், மார்கழி இறுதி நாளை போகிப் பண்டிகையாக கொண்டாடுகிறார்கள். பழையன போக்குவதால் இது போக்கி. பின் மருவி போகி என்றானது.

தை முதல் நாள் தைப் பொங்கலும், தை இரண்டாம் நாள் மாட்டுப் பொங்கலும் கொண்டாடப்படுகிறது. இந்நாட்களில் பொங்கல் வைத்தும், உயிர்களின் வாழ்வாதாரமாக விளங்கும் கதிரவனுக்கும், நீர் நிலைகளுக்கும், மேலும் உழவர்களின் செல்வமாக விளங்கும் மாடு, ஆடுகளுக்கும் நன்றி செலுத்தி பொங்கலை உணர்வுப்பூர்வமாக நாம் கொண்டாடுகிறோம். மூன்று நாட்கள் கொண்டாடப்படும் பொங்கலின் கடைசி நாளாக வருவது காணும் பொங்கல். இந்நாளில் உறவினர்களையும், நண்பர்களையும் கண்டு களித்து அன்பைப் பரிமாறிக் கொள்வர். சாதி, மத, இன வேறுபாடின்றி உலகத் தமிழர் அனைவரும் கொண்டாடும் இயற்கை திருவிழாவாக விளங்குகிறது தைப் பொங்கல் திருவிழா.

**ஜனனி முருகேசன்,**
**தமிழ்நாடு.**



# மனிதாபிமானம்

அந்த ஏழைத் தாயின் அழுகுரல் மருத்துவமனையையே ஸ்தம்பிக்க செய்தது. ஐயா! எப்படியாவது பணம் கொண்டு வந்துடுறேன், நீங்க எம்புள்ளைக்கு சிகிச்சை பண்ணுங்கய்யா, கொஞ்சமாவது மனிதாபிமானம் காட்டுங்கய்யா! என்று கதறிய தாயிடம், மனிதாபிமானம் செத்துப் போயி ரொம்ப காலமாச்சு, போய் முன்பணத்தைக் கட்டுறதைப் பாரும்மா, அப்போ தான் பையனை சிகிச்சைக்குக் கொண்டு போவோம், என்று சற்றும் பதிலுக்கு எதிர்பாராமல், அவ்விடத்தை விட்டு அகன்றார் அந்தப் பெரிய மருத்துவர்.



"சாலையோரத்தில் பழம் வித்துக்கிட்டிருந்த என் ஒரே மகனை லாரிக்காரன் ஏத்திட்டு நிக்காம போயிட்டான், இப்போ என் பையன் உயிருக்கு போராடுகிறான், யாராவது காப்பாத்துங்க" என்று புலம்பிய தாயைப் பார்த்த அம்மருத்துவமனை ஆயா, தன் கழுத்தில் கறுத்துப் போயி மெல்லிய மயிரிழைப் போன்றிருந்த ஒரே சொத்தாக இருந்த தனது தங்கச் சங்கிலியை அத்தாயின் கையில் கழற்றிக் கொடுத்தாள். அதைப் பெற்றுக்கொண்டு, செய்வதறியாமல் கண்ணீரும் ஓட்டமுமாய் சென்றவளுக்கு, அவளது குப்பத்து மக்களின் மனிதாபிமானத்தால் மருத்துவமனைக்கு கட்ட வேண்டிய முன்பணம் சேர்ந்ததும், ஓரளவுக்கு தெம்பு பெற்றவளாய் திரும்பி மருத்துவமனையை அடையுமுன் முழுநாள் முடிவடைந்திருந்தது.



பணத்தைப் பெற்றவுடன், சிகிச்சையை ஆரம்பித்த மருத்துவருக்குத் தெரியவந்தது, தாமதமான சிகிச்சையால், மூளையில் இரத்தம் உறைந்து மூளைச் சாவிற்கு இரையாகிப் போனான் அந்தச் சிறுவன். தன் பிள்ளை இனி உயிரிருந்தும் இவ்வுலகில் வாழவே முடியாது என்ற உண்மைத் தெரிந்ததும், அத்தாயின் கண்ணீருக்குப் பதில் சொல்ல அங்கு யாருமில்லை! அதே நேரம் அங்கு மருத்துவமனையில் மிகவும் பதற்றத்துடன் நர்ஸ், துணை மருத்துவரிடம், "நம்ம பெரிய டாக்டர் பையனுக்கு மாற்று இருதய சிகிச்சை நாளைக்குள் பண்ணனும், அமெரிக்காவிலிருந்து வந்த மருத்துவர் இப்போ தான் சொன்னார். ஆனால் இன்னும் அவனுக்கு இதயம் கிடைக்கவில்லை". அறையைச் சுத்தம் செய்துக் கொண்டிருந்த ஆயா, இதைக் கேட்டுக் கொண்டு அந்தத் தாயிடம்,



"பார்த்தியாம்மா! உன் மகனை இப்படிக் கொண்டுவந்த டாக்டரை, கடவுள் தண்டிச்சுட்டாரு" என்று கூறி பெருமூச்சு விட்டாள். அதைக் கேட்டதும் அந்தத் தாய் கண்ணீர் மல்க அங்கிருந்து நடந்துச் சென்றாள்.

மறுநாள், "அம்மா! என் தலைமுறையைக் காப்பாற்றி உன் பையனின் இதயத்துடிப்பை என் பையனிடம் கேட்க வைத்துவிட்டாய்! என்னை மன்னித்து விடுங்களம்மா!" என்று அந்தப் பெரிய மருத்துவர் அத்தாயின் கால்களில் விழுந்து அழுதார்.

அவர் நிமிர்ந்து பார்க்கும் போது, அந்தத் தாய் அங்கில்லை. அவளின் பெயரைக்கூடத் தான் தெரிந்துக் கொள்ளவில்லையே என்று எண்ணித் திரும்பியவரின் கண்களில் அருகிலிருந்த



ஒரு சிறுவனின் புத்தகத் தலைப்பு, அவரை செருப்பால் அடித்தது போலிருந்தது. அப்புத்தகத்தின் தலைப்பு, மானிடம் இறக்கும் வரை, மனிதாபிமானம் வாழும். அந்தத் தாயிற்கு அவன் அழைக்க விரும்பியப் பெயர், மனிதாபிமானம்.

-இரா.ராதா

## நமக்கான (வெற்றி) உணவு

அந்த ஊரில் உள்ள மிகப்பெரிய நட்சத்திர ஹோட்டலுக்கு அந்த நபர் சாப்பிட போகிறார். தனக்கான உணவையும் ஆர்டர் செய்கிறார். அதே ஹோட்டலுக்கு இன்னொரு நபர் தன் சக நண்பர்களோடு வருகின்றார். ஏற்கனவே வந்திருந்த அந்த நபர் பக்கத்தில் ஒரு டேபிள் ஃப்ரீயா இருக்க, அவர் அங்கு போய் உட்காருகிறார். தனக்கான உணவையும் ஆர்டர் செய்கிறார். அவர் ஆர்டர் பண்ணிய ஒரு சில நிமிடங்களிலேயே அவருக்கான உணவு பரிமாறப்படுகின்றது. உடனே அவர் அருகிலிருக்கும் அந்த நபரைப் பார்த்து, எனக்கு எப்போதும் எங்கு போனாலும் முதல் மரியாதைதான்... முதல் உபசரிப்பு தான் கிடைக்கும் என்று அவர் காதுபடவே சொல்கிறார். அந்த நபருக்கு பயங்கர அசிங்கமாக போய் விடுகிறது. தன்னைப் பார்த்து மற்றவர்கள் கேலியாக சிரிக்கும் பொழுது அவமானத்தில் கூனிக் குறுகிப் போய் விடுகிறார். அதே சமயத்தில் அந்த நபர் ஆர்டர் பண்ணிய இரண்டாவது உணவும் பரிமாறப்படுகின்றது. உடனே காத்துக்கொண்டிருந்த அந்த நபருக்கு பயங்கர கோபம் வந்தது. உடனே அங்கிருந்த வெயிட்டர கூப்பிட்டு, "நான் ஒரு ரெகுலரான உணவு தானே ஆர்டர் பண்ணினேன்...அதுக்கு

ஏன் இவ்ளோ டைம் எடுக்குறீங்க...?? என்னோட ஆர்டரை கேன்சல் பண்றேன்".. அப்படின்னு ரொம்ப கடுமையாகவே சொன்னார். அதற்கு அந்த வெயிட்டர் சார் கோவப்படாதீங்க... உங்களுக்கான உணவை எங்களோட சீஃப் செஃப் தயார் செய்து கொண்டு இருக்கின்றார்... இன்னும் ஐந்து நிமிடத்தில் உங்களுக்கான உணவு பரிமாறப்படும் என்று சொல்கிறார். அந்த நபரும் கொஞ்ச நேரம் பொறுமையாக உட்கார்ந்து இருக்க, அந்த வெயிட்டர் சொன்ன மாதிரியே ஐந்து நிமிடத்தில் அந்த நபருடைய டேபிள் வண்ணமயமான துணிகளால் அலங்கரிக்கப்பட்டு பல விதமான உணவுகளும் பரிமாறப்படுகின்றது. அந்த நபருக்கு பயங்கர ஆச்சரியம்..!!!



"நான் இதையெல்லாம் ஆர்டர் பண்ணவே இல்லையே.. எனக்கு எதற்கு இதெல்லாம் பரிமாறுகிறீர்கள்?" என்று கேட்டார் அந்த நபர். "நீங்கள் ஹோட்டலுக்குள் வரும்பொழுதே எங்க முதலாளி உங்களைப் பார்த்துவிட்டார். நீங்கள் அவருடைய நெருங்கிய பால்ய நண்பன் என்றும் உங்களுக்கு பலவிதமான உணவுகள் பரிமாறப்பட வேண்டும் என்றும் எங்களுக்கு உத்தரவு போட்டார். அதுமட்டுமல்ல, உங்களுக்காக ஸ்பெஷலா ஒரு கிஃப்ட் வாங்க கடைக்குப் போயிருக்கிறார்...இன்னும் சிறிது நேரத்தில் வந்துவிடுவார்" என்று அந்த வெயிட்டர் வேகமாக பதில் சொல்லி முடித்தார். அவரைப் பார்த்து கேலி பண்ணி சிரித்தவர்கள் எல்லாம் வாயடைத்துப் போய்விட்டார்கள்...

இதைப்போலத்தான் நண்பர்களே..!!

நமது வாழ்க்கையில் நமக்கு முன்னாடி முன்னேறி போனவர்களும், ஜெயித்தவர்களும் நம்மைப் பார்த்து கேலி பண்ணலாம்... சிரிக்கலாம்... என்னடா இது...?! வாழ்க்கையில்

இவ்வளவு முயற்சிகள் செய்கின்றோம், இவ்வளவு சிரமப்பட்டு போராடுகின்றோம்...ஆனாலும் நமக்கான அங்கீகாரம் கிடைக்கவில்லையே..!! என நம்மில் பலபேர் வருத்தப்படலாம். கவலையே படாதீர்கள் நண்பர்களே....!!!

காலம் நமக்கான உணவைத்(வெற்றியை) தயார் பண்ணுவதற்கு சிறிது அவகாசம் எடுத்திருக்கலாம்... ஆனால் கண்டிப்பாக ஒரு நாள் ராஜ மரியாதையோடு நமக்கான உணவு(வெற்றி) நமக்கு கிடைக்கும்.



அவ்வாறு கிடைக்கும் பொழுது நம்மைப் பார்த்து கேலி பண்ணி சிரித்தவர்கள் எல்லாம் வாயடைத்துப் போய் விடுவார்கள். நாம் விடாமுயற்சியோடு ஒரு காரியத்தை செய்யும்பொழுது நமக்கான வெற்றி நம்மைத் தேடிவரும்..

இதை நம் வள்ளுவன் பாணியில் சொல்ல வேண்டுமென்றால்....

"முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்".

முயற்சி நம் வசம், பயன் காலத்தின் வசம் என்று சொல்லி, இந்தக்கதை உங்கள் மனதில் ஒரு புதிய தன்னம்பிக்கையையும், மாற்றத்தையும் ஏற்படுத்தி இருக்கும் என்ற நம்பிக்கையில் உங்களோடு பயணிப்பது,

**விஜயா ராமஜெயம்.**

## தமிழை அறிவோம்


AGENCY - முகவாண்மை

WORKSHOP - பட்டறை, பணிமனை

REMOTE CONTROL - தொலையியக்கி



Tatvi Rajkumar


Tejovrish Rajkumar


Abhi

# SBTK ஓவியப் போட்டி ஓவியங்கள்




























































# SBTK ஓவியப் போட்டி ஓவியங்கள்






Savitha Shankar Grade 8



Shriya Grade 7



Shreevardhan Grade 6



Pavithra Grade 6



Navin Bargav Grade 7



Rithwin Grade 6




# SBTK ஓவியப் போட்டி ஓவியங்கள்




*Varunika Grade 3B*



*Mayurika Grade 3B*



*Omkar Grade 3B*





*Hasiny Grade 3B*



*Nalan Grade 4A*



*Harshith Grade 4A*




*Harini Grade 5*

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு

SOUTH BAY TAMIL KALVI

keetru@sbtsla.org

| வாணி கோபால்சாமி<br>இணை ஆசிரியர் | சுபா ஹரி<br>ஆசிரியர் | ரம்யா நரசிம்மன்<br>இணை ஆசிரியர் |
| --- | --- | --- |